


திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் உள்ள மாவட்டக் கழக அலுவலகமான, "கலைஞர் அறிவாலயம்" தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முன்னாள் அமைச்சர், சோழமண்டல தளபதி கோ.சி.மணி அவர்களின் 94 வது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.இராமச்சந்திரன், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாநகரச் செயலாளர் சண்,இராமநாதன், மாநில நிர்வாகிகள் எஸ்.ஜித்து, அஞ்சுகம்பூபதி, மாவட்ட துணைச்செயலாளர் அ.புண்ணியமூர்த்தி, கனகவள்ளி பாலாஜி, பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஆறுமுகம், டி.புண்ணியமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.செல்லக்கண்ணு, தோ.அருளானந்தசாமி, இரா.உலகநாதன், கு.செல்வராஜ், வை.சிவசங்கரன், எஸ்.முரசொலி, எஸ்.செல்வக்குமார், ஜெ.கார்த்திகேயன், பேரூர் செயலாளர்கள் சி.நாகராஜன், டி.கே.எஸ்.ஜி.கல்யாணசுந்தரம், பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.சி.மேத்தா, எஸ்.சதாசிவம், டி.எஸ்.கார்த்திகேயன், ஆர்.கே.நீலகண்டன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# "சுற்றுச்சூழல் காக்கப் பழகு"

## செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை!

திருப்பூர், செப். 14 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல் படி கழக சுற்றுச்சூழல் அணி தமிழக பள்ளிகளில் பயிலும் இளம் தலைமுறை மாணவ, மாணவியர்கள் சுற்றுச்சூழல் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைத் தெளிவாகக் கற்றுணரவும், தமது அளவிலான சூழல் பொறுப்புணர்வைப் பெற்று வளரவும் "சுற்றுச்சூழல் காக்கப் பழகு" என்னும் விழிப்புணர்வு திட்டத்தினை முன்னெடுக்கின்றோம் என்று சுற்றுச் சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது அறிக்கை வருமாறு:-

தமிழக மாணவ, மாணவியர்களை நாளைய தலைமுறை தலைவர்களாக, பல்துறை நிபுணர்களாக வளர்த்தெடுக்க விரும்பும் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேட்கைக்கு உதவும் வகையில் "சுற்றுச்சூழல் காக்கப் பழகு" செயல் திட்டம் அமைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் வகுத்துள்ள கொள்கைகள் வழி நின்று சுற்றுச்சூழல் மேம்பாட்டு விழிப்புணர்வு திட்டமாகத் தமிழக பள்ளிகளில் கொண்டு வரப்படும்.

நிகழ்ச்சிக் குறிப்புகள் : அறிஞர் பெருமக்களின் விரிவுரைகள், கால நிலை மாற்றம் குறித்த ஆய்வகம் அமைத்தல் (*Setting up of Climate Change Learning Laboratory*), சுற்றுச்சூழல் மேம்பாடு, சூழலியல் பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றில் தனியார் பங்களிப்புடன் வினாடி வினா போட்டிகளை (*Environmental Hackathon in TN Schools*) நடத்துதல், தமிழக மாணவ, மணவியர்களை சூழலியல் ஒலிம்பியாட் (*Environment Olympiad*) தேர்வுகளில் சிறப்பிடம் பெற வழிவகை செய்தல், சூழல் பாதுகாப்பு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் (*Green Skills Development*) வழங்குதல், பள்ளிகளில் நாற்றுப் பண்ணைகளை மாணவ, மாணவியர்களே உருவாக்கிப் பராமரித்தல். "*Mission Miyawaki*" திட்டம் மூலம் குறுங்காடுகள் அமைத்தல் மற்றும் அதன் சிறப்பு அம்சங்கள் விளக்க உரைகள் போன்ற செயல்பாடுகளைக் கொண்டதாய் உருவாக்கப்பட்டுள்ளது. "சுற்றுச்சூழல் காக்கப் பழகு" செயல் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் இத்திட்டம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படவுள்ளது.



"கல்வியே மிகப்பெரும் ஆயுதம்" என்னும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வார்த்தைக்கு வலுசேர்க்க சூழலில் கல்வி பயிற்று முறைகளைப் பள்ளிகளில் கொண்டுவரவும், கழகத் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் எல்லாத்துறைகளையும் போலவே "சுற்றுச்சூழல் மேம்பாடு மற்றும் பாதுகாப்பிலும்" தமிழ்நாடு வலுப்பெறவும், கழக சுற்றுச்சூழல் அணியின் மூலம் திட்டத்தின் வாயிலாக மாணவ, மணவியர்களுக்கு நிறைவான விழிப்புணர்வை வழங்குவோம் என்றும் உறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு கழக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர், அயலக தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. மாநாடாக மாறிய ஜி20 உச்சி மாநாடு!

## அரசியல் விமர்சகர்கள் கருத்து!

புதுடெல்லி, செப்.14-

டெல்லியில் நடந்த ஜி 20 உச்சி மாநாட்டை பா.ஜ.வின் பிரச்சார மாநாடாகவே பிரதமர் மோடி மாற்றி விட்டதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஜி20 அமைப்பின் தலைவர் பதவி சுழற்சி முறையில் உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்படும். இதன்படி 2023ம் ஆண்டுக்கான தலைவர் பதவி இந்தியாவுக்கு கிடைத்தது. ஆனால், இந்த பதவி பிரதமர் மோடிக்கு உலக நாடுகள் அளித்த அங்கீகாரம் என்று பா.ஜ. பிரச்சாரம் செய்யத் துவங்கியது. ஜி 20 இந்திய தலைமைக்காக வடிவமைக்கப்பட்ட சின்னத்தில் பா.ஜ.வின் தேர்தல் சின்னமான தாமரை இடம் பெற்றிருந்தது சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. ஆனால், அதை பற்றியெல்லாம் கவலைப்படாமல் தாமரை சின்னத்தை தொடர்ந்து பயன்படுத்தினர். நாடு முழுவதும் கடந்த பல மாதங்களில் ஜி20 அமைப்பின் பல்வேறு கூட்டங்கள் நடத்தப்பட்டது. இதையும் மோடி அரசின் சாதனையாகவே திட்டமிட்டு பிரச்சாரம் செய்து வந்தனர்.

இந்த நிலையில் இந்தியாவின் தலைமையின் கீழ் டெல்லியில் கடந்த 9 மற்றும் 10ம் தேதி உச்சி மாநாடு நடந்தது. இதில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் உள்ளிட்ட உலக தலைவர்கள் பங்கேற்றனர். இந்த உச்சி மாநாடு பா.ஜ.வின் மாநாடு போலவே நடத்தப்பட்டதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். உச்சி மாநாட்டையொட்டி 9ம் தேதி இரவு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஜி20 தலைவர்களுக்கு விருந்தளித்தார். இந்த விருந்தில் பங்கேற்க அனைத்து மாநில முதல்வர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அதே நேரத்தில், காங்கிரஸ் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட

### காங்கிரஸ் முதல்வர்கள் புறக்கணிக்கப்பட்டனர்

ஜி20 விருந்தில் மு.க. ஸ்டாலின்(தமிழ்நாடு), நிதிஷ்குமார்(பீகார்), மம்தா பானர்ஜி(மேற்கு வங்கம்), ஹேமந்த் சோரன் (ஜார்க்கண்ட்), உள்ளிட்ட பல மாநில முதல்வர்கள் பங்கேற்றனர். ஆனால், சுக்விந்தர் சிங் சுக்கு(இமாச்சல்) தவிர மற்ற காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் அசோக் கெலாட்(ராஜஸ்தான்), பூபேஷ் பாகல்(சட்டீஸ்கர்), சித்தராமையா (கர்நாடகா) பங்கேற்கவில்லை. கேரள முதல்வர் பினராயி விஜயன், தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவும் வரவில்லை.

எதிர்க்கட்சி தலைவர்கள் யாருக்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை. இது மோடியின் மனநிலையை காட்டியதாக காங்கிரஸ் விமர்சித்தது. இந்த உச்சி மாநாட்டை பா,ஜ,வின் சொந்த மாநாடு போல் நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கார்கே போன்ற மூத்த தலைவர்கள் பைடன், ரிஷி சுனக் போன்ற உலகத் தலைவர்களை சந்திப்பதை தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் அழைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஜி 20 உச்சி மாநாட்டின் வெற்றி நாயகனாக பிரதமர் மோடியை சித்தரித்து பிரசாரம் செய்ய பா.ஜ. யுக்தி வகுத்துள்ள தாக அரசியல் பார்வையாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### அயோத்தியில் ராமர் கோயில் திறப்பின் போது

# கோத்ரா போன்ற சம்பவம் நிகழலாம்!

## உத்தவ் தாக்கரே எச்சரிக்கை!

மும்பை, செப். 14 -

அயோத்தியில் புதிதாக கட்டப்படும் ராமர் கோயில் திறக்கப்படும் போது கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் போன்ற சம்பவம் நிகழலாம் என்றும் உத்தவ் பாலாசாகேப் தாக்கரே சிவசேனா கட்சி தலைவர் உத்தவ் தாக்கரே எச்சரித்துள்ளார். அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டு வருகிறது. இந்த கோயில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் திறக்கப் படலாம் என்று கூறப்படுகிறது.

இந்த விழாவிற்கு அரசு நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான மக்கள் ரயில்களிலும் பஸ்களிலும் இதர வாகனங்களிலும் அயோத்திக்கு வரவழைக்கலாம் என்றும் உத்தவ் தாக்கரே தெரிவித்தார்.

அவர்கள் திரும்பி வரும் போது கோத்ரா போன்ற சம்பவம் நிகழக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார். 2002ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ம் தேதி கரசேவகர்கள் அயோத்தியில் இருந்து சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயிலில் திரும்பிக் கொண்டிருந்தனர். குஜராத் மாநிலம் கோத்ராவில் இந்த ரயில் எரிக்கப்பட்டு கரசேவகர்கள் பலர் உயிர் இழந்தனர். இதனை தொடர்ந்து குஜராத் முழுவதும் பயங்கர கலவரம் வெடித்தது. இதைத்தான் உத்தவ் தாக்கரே சுட்டிக்காட்டுகிறார்.

### ஜி20 மாநாடு முடிந்து விட்டது!

# இனி உள்நாட்டு பிரச்சினையை பா.ஜ.க. அரசு கவனிக்க வேண்டும்!

## காங்கிரஸ் தலைவர் கார்கே வலியுறுத்தல்!

புதுடெல்லி, செப். 14-

ஜி20 உச்சி மாநாடு முடிந்துள்ள நிலையில், இனி பணவீக்கம், வேலை வாய்ப்பின்மை, மணிப்பூர் வன்முறை போன்ற உள்நாட்டு பிரச்சினைகளில் ஒன்றிய பா.ஜ. அரசு கவனம் செலுத்த வேண்டுமென காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தி உள்ளார்.

காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது: -

இப்போது ஜி20 கூட்டம் முடிவடைந்துள்ள நிலையில், பா.ஜ. அரசு உள்நாட்டு விவகாரங்களில் கவனம் செலுத்த வேண்டும். ஆகஸ்ட் மாதத்தில் ஓட்டல்களில் ஒரு சாப்பாட்டின் விலை 24 சதவீதம் அதிகரித்துள்ளது. நாட்டில் வேலையின்மை விகிதம் 8% ஆக உள்ளது. இளைஞர்களின் எதிர்காலம் இருண்டதாக உள்ளது. பிரதமர் மோடியின் தவறான ஆட்சியால், ஊழல் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த விஷயத்தில், சி.ஏ.ஜி.யின் பல அறிக்கைகள் பா.ஜ.வை அம்பலப்படுத்தி உள்ளன.



ஜம்மு காஷ்மீரில் ரூ.13,000 கோடி ஜல் ஜீவன் ஊழல் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இதில் ஊழலை வெளிப்படுத்திய தலித் ஐ.ஏ.எஸ். அதிகாரி துன்புறுத்தப்பட்டுள்ளார். அதே போல, பிரதமரின் உற்ற நண்பரின் மற்றொரு கொள்ளையும் சமீபத்தில் மீண்டும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. 2019 மக்களை தேர்தல் முன்பாக, ரிசர்வ் வங்கி கருவூலத்தில் இருந்து ரூ.3 லட்சம் கோடியை விடுவிக்க அப்போதைய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் விரால் ஆச்சார்யாவுக்கு அழுத்தம் தரப்பட்ட தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

மணிப்பூரில் கடந்த சில நாட்களாக மீண்டும் வன்முறை தொடங்கி உள்ளது. இமாச்சலப்பிரதேசம் இயற்கைப் பேரிடரால் தத்தளிக்கிறது. ஆனால் திமிர்பிடித்த பா.ஜ. அரசு, அதை தேசிய பேரிடராக அறிவிப்பதைத் தவிர்த்து வருகிறது.

இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியில், பிரதமர் மோடி உண்மையை மறைக்க கடுமையாக முயற்சிக்கிறார். ஆனால் பொது மக்கள், கவனத்தை சிதறடிக்கும் பிரச்சினைகளை கவனிக்காமல், உண்மையைக் கேட்கவும் பார்க்கவும் விரும்புகிறார்கள். 2024 மக்களவை தேர்தலில் பா.ஜ. அரசை வெளியேற்ற மக்கள் வழிவகை செய்யத் தொடங்கி விட்டார்கள்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.




செஞ்சியில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### திருச்சி வடக்கு மாவட்டம்

## மண்ணச்சநல்லூர் கிழக்கு ஒன்றியம் - ச.கண்ணனூர் பேரூர், 13 வது வார்டு அமைப்புகளுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருச்சி வடக்கு மாவட்டம், மண்ணச்சநல்லூர் கிழக்கு ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. **கே.பி.ஏ.செந்தில் (எ) கார்த்திகேயன்**, (9, சுந்தர் நகர், நொச்சியம் அஞ்சல், மண்ணச்சநல்லூர் 621 216.) அவர்கள், மண்ணச்சநல்லூர் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும்;

மண்ணச்சநல்லூர் கிழக்கு ஒன்றியம், ச.கண்ணனூர் பேரூர், 13வது வார்டு கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. **ஆர்.பாலசுப்பிரமணியன்**, (சன்னதி வீதி,ச. கண்ணனூர், மண்ணச்சநல்லூர் 621112, திருச்சி மாவட்டம்) அவர்கள் 13வது வார்டு கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள்: 12- 9- 2023

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை ந.பூ.இராமஜெயம்

### செப்டம்பர் 14 (2007)



இளமைக்காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

வட்ட மற்றும் பகுதி அவைத் தலைவராகவும் பின்னர், பகுதிக் கழகச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1996ஆம் ஆண்டு மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்து நாளிதழ் தொழிற்சங்கத்தில் தொடர்ந்து 35 ஆண்டுகள் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

"நான் மதிக்கின்ற, போற்றுகின்ற, புகழ்கின்ற, பாராட்டுகின்ற, என்நெஞ்சில் வைத்து நினைத்து மகிழ்கின்ற ஒரு தொண்டன் ராமஜெயம்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**